இணைப்பு **01**

நீர் இணைப்புக்கான விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் மற்றும் நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள்

A. Form NC-01 விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் (இணைப்பு – 01)
B. விண்ணப்பப்படிவத்தை நிரப்பி சமர்ப்பித்ததன் பின்னர் நீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (இணைப்பு – 02)

A. Form NC-01 விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கட்ட இலக்கம்	அறிவுறுத்தல்கள்
1	தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரரின் முழுப் பெயரை உரிய கூட்டினுள் தெளிவாக எழுதவும்.
2	நிறுவனமாயின் நிறுவன பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட வேண்டிய பதவிப் பெயரை அல்லது வணிகப் பெயரை உரிய கூட்டினுள் தெளிவாக எழுதவும்.
3	முதலெழுத்துக்களுடன் பெயரை ஆங்கில கெப்பிடல் எழுத்தில் உரிய கூட்டினுள் எழுதவும். (ஒவ்வொரு பெயருக்கும் டையில் ஒரு வெற்றுக் கட்டத்தை விடவும்) (Rev./Mr./Mrs./Miss)
4	விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு இலக்கம் வீதம் தெளிவாக எழுதவும் (அதன் பிரதி ஒன்றினை ணைக்கவும்).
5	முகவரியை உறுதிப்படுத்துவதற்காக தங்களது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியும், நீர் இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் இடத்தின் முகவரியும் ஒன்றாக இருந்தால் அதன் பிரதி ஒன்றினை அல்லது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி மாற்றமடையுமிடத்து கிராம உத்தியோகத்தரின் சான்றிதழினை அல்லது ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி அறிவிப்பு (மதிப்பீட்டு வரி இலக்கமும் தபால் இலக்கமும் ஒன்றாக காணப்படுமிடத்து) அல்லது விண்ணப்பதாரியின் பெயரில் உள்ள மின்சாரக் கட்டணப் பட்டியல் ஒன்றினை சமர்ப்பிக்கவும்.
9	நீர் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் வசிக்காமல், நிரந்தரமாக வேறு ஒரு இடத்தில் வசிப்பவராக இருந்தால், தயவு செய்து அந்த முகவரியைக் குறிப்பிடவும். (ஒவ்வொரு பெயருக்கும் இடையில் ஒரு வெற்றுக் கட்டத்தை விடவும்.)
10	நீர் இணைப்பினை கோரும் விண்ணப்பதாரருடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரரின் கைத்தொலைபேசி இலக்கம், வீட்டுத் தொலைபேசி இலக்கம், அலுவலகத் தொலைபேசி இலக்கம், மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிடவும்.
12	நீர் இணைப்பு கோரப்படுகின்ற இடம் ஏதாவது சமூக அடிப்படையிலான அமைப்பு ஒன்றுடன் இணைந்து செயற்படும் பிரதேசத்திற்கு உட்பட்டதாயின் அவ்விடயம் சம்பந்தமாக குறிப்பிட்டு, நீர் வழங்கல் சபையிடமிருந்து நீர் இணைப்பு ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு சமூக அடிப்படையிலான அமைப்பின் இணக்க கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
13	நீர் இணைப்பு வழங்குவதற்கு தேவையான விதிக்கப்பெற்ற ஆழத்தையுடைய நீளத்திற்கு கான் வெட்டுதல் மற்றும் மூடும் நடவடிக்கைகளை விண்ணப்பதாரர் செய்வாரா; இல்லையா? என மிக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு செய்ய வில்லையாயின் அதற்கான செலவினை சபையினால் மேற்கொள்வதாக கருதப்பட்டு அதற்குரிய தொகையானது மதிப்பீட்டுடன் சேர்க்கப்படும்.
16	இணைப்பு தேவைப்படும் இடத்தை இலகுவாக கண்டறிவதற்காக இங்கு தெளிவான வரைபடம் ஒன்றினை வரையவும். தேவையாயின் தனித்தனி வரைபடங்களை இணைக்கவும். அறுகாமையில் உள்ள வீட்டில் நீர் இணைப்பு இருப்பின் அந்த கணக்கு இலக்கத்தை குறிப்பிடுவது தங்களது இருப்பிடத்தைக் கண்டறிவதை இலகுவாக்கும். நீர் இணைப்பு பெற்றுக்கொள்ளப்படும் இடத்தின் அமைவிடத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக GPS ஆள்கூறுகளை (GPS Coordinates) உரிய அட்டவணையில் குறிப்பிடவும். ஆள்கூறுகளை பெற்றுக்கொள்வது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 03 மற்றும் 04 ஐ பார்க்கவும்).
18	இவ்விடத்திற்கு இதற்கு முன்னர் நீர் இணைப்பு பெறப்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்களை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். இரண்டாவது நீர் இணைப்பின் நிமித்தம், அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்தி முடித்துள்ளதாக உரிய சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து நீர் வழங்கல் வடிகாலமைகப்பு சபைக்கு ஒப்படைத்து பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.